## வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி தனியார் கம்பனி – 2017

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி தனியார் கம்பனியின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினம் வரை சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறான தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் 2018 செப்டெம்பர் 19 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கீட்டு ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்

கம்பனியினது நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றபோதும், மீளாய்வாண்டிற்கான கணக்கீட்டு ஏடுகளும் பதிவேடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 நிலவும் சொத்துக்களும் பொறுப்புகளும்

கம்பனியால் இறுதியாகத் தயாரிக்கப்பட்டுக் கணக்காய்வு செய்யப்பட்ட 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினம் தொடர்பான விபரம் வருமாறு.

| | **பெறுமதி** |
|---|---|
| சொத்துக்கள் | **ரூபா** |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 2,517,816,106 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 5,209,490,746 |
| மொத்தச் சொத்துக்கள் | 7,727,306,852 |
| பொறுப்புகள் | |
| நடைமுறை பொறுப்புகள் | 2,397,821,256 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 531,113,782 |
| மொத்தப் பொறுப்புகள் | 2,928,935,038 |
| நிகர சொத்துக்கள் / உரிமை | 4,798,371,814 |
| மொத்தப் பொறுப்புகள் | 7,727,306,852 |
| மொத்த வருமானம் | 7,799,193,805 |
| மொத்த செலவினம் | 6,926,120,414 |
| மிகை | 873,073,391 |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 131 ஆம் பிரிவு | ஆண்டறிக்கையானது கம்பனி வருடாந்த பொதுக் கூட்ட நாள் முதலாக 30 வேலை செய்யும் நாட்களுக்குள் கம்பனிகள் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், கம்பனியானது மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரித்திருக்கவில்லை. |
| (ii) 133 ஆம் பிரிவு | ஆண்டிற்கொரு முறை கம்பனியின் பணிப்பாளர் சபையால் கம்பனியின் ஐந்தொகைத் திகதியிலிருந்து 6 மாதங்களைக் கடக்காததும் முன்னைய வருடாந்தக் கூட்டத்தின் பின்னர் 15 மாதங்களுக்கு மேற்படாததுமான நாளொன்றில் பங்குதாரர்களது வருடாந்தக் கூட்டத்தை நடாத்த வேண்டியபோதும், 2014 ஆம் ஆண்டின் பின்னர் கம்பனி அவ்வாறான கூட்டத்தை நடாத்தி |

இருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நடவடிக்கைகளும் மீளாய்வும்

2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 43 ஆம் இலக்க குறைவாகச் செயற்படும் சொத்துக்களைப் புனரமைக்கும் அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை சீனி தனியார் கம்பனியின் 2 செயற்பாட்டுக் கூறுகளாக பெல்வத்த சீனிக் கம்பனியும் செவனகல சீனிக் கம்பனியும் செயற்படுகின்றன. இக் கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல சீனிக் கம்பனிக்கு சொந்தமான கரும்பு சாகுபடி செய்யக் கூடிய மொத்த நிலப்பரப்பு 4215 ஹெக்டேயர் ஆகும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டளவில் கம்பனியின் கரும்பு சாகுபடிக்குள்ளான மொத்த நிலபரப்பு 3504 ஹெக்டேயர் ஆகும். இதற்கமைய, தொழிற்சாலையின் செயற்பாட்டை அதி உயர் ஆற்றலுடன் நடாத்துவதற்குத் தேவையான கரும்பு வழங்குதலைப் பெறுவதற்குப் போதுமான காணி கம்பனியிடம் இருந்தபோதும், அக்காணியில் விளைச்சலை மேற்கொண்டு தொழிற்சாலையினது உற்பத்தியை உயர்வடையச் செய்வதற்கான நடவடிக்கைகளைக் கம்பனி மேற்கொள்ளவில்லை.

(ஆ) செவனகல சீனிக் கம்பனியினது 2012 தொடக்கம் 2017 வரையான 06 ஆண்டு காலத்தைக் கவனத்திற் கொள்கையில் 2016 ஆம் ஆண்டின்போது கரும்புச் சாகுபடி 86 மெற்றிக் தொன்னாக இருந்தபோதும், 2017 ஆம் ஆண்டளவில் 69 மெற்றிக் தொன்னாக குறைவு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், இந்நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கம்பனி மேற்கொள்ளவில்லை.

(இ) போக்குவரத்தில் அதிக காலம் கழிவதால், தொழிற்சாலை இடர்கள், கரும்புத் தண்டுகளில் ஏற்படும் கழிவுகளும் சருகுகளும் காரணமாக சீனி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கரும்புத் தண்டுகளில் உள்ள சீனியின் அளவு 2012 முதல் 2017 ஆம் ஆண்டளவில் முறையே பெல்வத்தை சீனிக் கம்பனியின் கரும்பு மெற்றிக் தொன் கூறு ஒன்றிற்கு 11.23 சதவீதத்திலிருந்து 7.95 சதவீதம் வரையிலும் செவனகல சீனிக் கம்பனியில் 7.95 சதவீதத்திலிருந்து 7.62 சதவீதம் வரையிலும் குறைவடைந்திருந்தது. அவ்வாறே, அக் கரும்புத் தண்டுகளில் சீனியைப் பெறுவதற்கான சதவீதம் 2012 தொடக்கம் 2017 ஆம் ஆண்டளவில் பெல்வத்தை சீனிக் கம்பனியில் முறையே 8.95 சதவீதத்திலிருந்து 7.3 சதவீதம் வரையும் செவனகல சீனிக் கம்பனியில் 8.01 சதவீதத்திலிருந்து 7.67 சதவீதம் வரையிலும் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளைக் கம்பனி மேற்கொள்ளவில்லை.

(ஈ) கரும்பு வழங்கப்படுவது குறைவடைந்ததன் காரணமாக கம்பனியின் அதி கூடிய இயந்திர ஆற்றலாகிய 837,500 மெற்றிக் தொன் கரும்பிலிருந்து 35 சதவீதத்தையும் மீளாய்வாண்டின்போது பயன்படுத்த முடியாது போனது. ஆகவே, கம்பனியின் முன்னைய ஆண்டிற்கான சீனி உற்பத்தி 51,422 மெற்றிக் தொன் சீனி ஆகியபோதும், மீளாய்வாண்டளவில் 42,841 மெற்றிக் தொன் வரை 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையால் எதனோல் உற்பத்தியினது பிரதான மூலப் பொருளாகிய மொலேசஸ் உற்பத்தியும் குறைவடைந்திருந்தது. எதனோல் விற்பனை குறைவானமையால் ஸ்பிரிட் தாங்கிகள் நெடுங்காலமாக நிறைந்தவாறு இருந்து ஸ்பிரிட் களஞ்சியப்படுத்தப்படுவதில் சிக்கலை விளைவித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எதனோல்

உற்பத்தி 11,917,279 தொடக்கம் 7,045,228 பல்க் லீட்டர் வரை 41 சதவீதம் குறைவடைந்திருந்தபோதும், இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) சீனி உற்பத்தி குறைவடைவதன் காரணமாக அதில் வெளியேற்றப்படும் பெகேஸின் உதவியுடன் உருவாக்கப்பட்ட எரிசக்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டளவில் 16,346 மெகா வோட் மணித்தியாலங்களிலிருந்து 12,534 வரை குறைவடைந்து, அதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது எரிசக்தி மாற்றீடுகளுக்கு மேலதிக கிரயம் கம்பனியால் செலவிடப்பட வேண்டியேற்றப்பட்டபோதும், இந்நிலைமையை முகாமைத்துவமிடுவதற்குக் கம்பனி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(எ) காணி அபிவிருத்திப் பிரிவின் 43 டிரக்டர்களில் 29 டிரக்டர்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பழுதுபார்க்கப்படுவதற்காக கமத்தொழில் வேலைத்தளத்தில் 06 மாதங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் உற்பத்தி நடவடிக்கைகள் நெருக்கடிக்குள்ளாகியபோதும், அந்த டிறக்டர்களைத் துரிதமாகப் பழுதுபார்த்து காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்குக் கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஏ) பயிர்ச் செய்கைக்காக காணியைத் தயார்படுத்துவதற்குத் தேவையான இயந்திர சாதனங்களை நேர காலத்துடன் வழங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காமையால் நிறுவனத்தின் காணி அபிவிருத்திப் பிரிவால் கணிப்பிடப்பட்டவாறு கம்பனி இழப்பிற்குள்ளான வருமானம் ஹெக்டேயார் ஒன்றிற்கு ரூபா 409,950 ஆகும்.

(ஐ) கரும்புச் சாகுபடியை அறுவடை செய்வதற்கான களத்தை தெரிவு செய்கையில் ஒவ்வொரு களஞ்சியத்திலிருந்தும் பெறப்படும் கரும்பினது மாதிரிகளை தொழிற்சாலையின் இரசாயன கூடத்திற்கு அனுப்பி, சீனியைப் பெறும் சதவீதம் சம்பந்தமாக வழங்கப்படும் அவதானிப்பின் அடிப்படையில் கரும்பை அறுவடை செய்வது கம்பனியின் சம்பிரதாயமாயினும், பெல்வத்தை சீனிக் கம்பனியில் 2017 பெரும் போகத்தின்போது கரும்பு அறுவடை செய்யப்படுகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி கம்பனியின் முன்னாள் பதில் பொது முகாமையாளரால் அச்சம்பிரதாயம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, இழப்பிற்குள்ளான வருமானம் ரூபா 159,559,000 என கேந்திரத் தோட்டப் பிரிவின் முகாமையாளரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஒ) முப்பது ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த சீனிக் கம்பனி தொடர்ச்சியாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் பொருட்டு அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் நேரகாலத்துடன் நடைபெறுவதற்கான நோக்கத்துடன் உபகரணங்களைக் கோரும்போது அவற்றைக் கொள்வனவுப் பிரிவு தாமதித்து கொள்வனவு செய்வதால் 2018 மார்ச் 31 க்கு முன்னர் முடிவடைய வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் 2018 ஏப்ரல் இறுதி வரை நடைபெறாது கரும்மை அரைக்கும் நடவடிக்கைகள் ஒரு மாத கால தாமதத்திற்குள்ளாகியிருந்தன.

## 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெல்வத்தை சீனிக் கம்பனியின் விசாரணைப் பிரிவுக்கு மீளாய்வாண்டில் அறிவிக்கப்பட்ட 104 மொத்தப் புகார்களில் 36 க்கு மாத்திரமே இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. போதியளவு விசாரணை உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து இந்நிலைமையை முகாமைத்துவமிடுவதற்குக் கம்பனி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரை அறிக்கையிடப்பட்ட கம்பனியின் வழக்குகளுடன் தொடர்புடைய தகவல்களோ அல்லது கோவைகள் எதுவுமோ சட்டப் பிரிவில் இருக்காததுடன், மீளாய்வாண்டின்போது ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அவரது கடமைகள் முறையாக ஒப்படைக்கப்பட்டு சட்டப் பிரிவை முறையாக அமைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(இ) செவனகல சீனிக் கம்பனியின் காபனீரொட்சைட் உற்பத்திச் செயற்திட்டம் தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குத் தேவையான காணி, மின்சாரம், நீர் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் கட்டணமின்றி சீனிக் கம்பனியால் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒரு கிலோ காபனீரொட்சைட்டிற்கு குறைந்த விலையாகிய ரூபா 25 கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கம்பனியின் வளத்தைப் பயன்படுத்தி தனியார் கம்பனி 20 ஆண்டுகளாக இலாபத்தைச் சம்பாதிப்பதற்குக் கம்பனியால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அவ்விலையை மீளாய்வு செய்து கம்பனியின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) செவனகல சீனிக் கம்பனியில் நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தைப் பொருத்துவதற்கான ரூபா 27,067,812 ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2014 மே மாதமளவில் அது முடிவடைய வேண்டியபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளாமையால் தொழிற்சாலை பெற வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தையும் கம்பனி பெறத் தவறியிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது ரூபா 479,808 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் வழங்கும் பம்பு (Fuel dispensing pump) மூலம் எரிபொருளோ வழங்குகையில் வழங்க வேண்டிய அளவை விடக் குறைவாக வழங்குவதால் 2018 சனவரி 23 இல் உள்ளவாறு 409 லீட்டர் டீசல் மிகை காணப்பட்டது. கொள்வனவு செய்யப்பட்டு ஓராண்டிற்கு முன்னரே பழுதுபார்ப்பதற்கோ புதிய எரிபொருள் வழங்கும் பம்பு ஒன்றைப் பெறுவதற்கோ கம்பனி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஊ) செவனகல சீனிக் கம்பனியின் பிரதான களஞ்சியத்திலிருந்த 66 ஒக்சிஜன் சிலின்டர்களில் 22 தொலைந்து போயிருந்தன. அது தொடர்பாக விசாரித்து பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்குக் கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை.

(எ) செவனகல சீனிக் கம்பனியின் பிரதான களஞ்சியத்தில் 10 எசிடிலின் சிலிண்டர்கள் மிகையாக இருந்தன. கம்பனி ஏடுகளைப் பேணாமையால் இக் குறைபாடுகள் நிகழ்ந்திருந்தன. எனினும், இந்நிலைமையை முகாமைத்துவமிடுவதற்கான நடவடிக்கைகளைக் கம்பனி மேற்கொள்ளவில்லை.

(ஏ) செவனகல சீனிக் கம்பனியின் நலிவான உள்ளகக் கட்டுப்பாடு விதி முறைகளின் காரணமாக மீளாய்வாண்டின் போது 26 எசிடிலின் சிலிண்டர்களில் இருந்த வாயு தொலைந்ததன் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 78,185 ஆகும். இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு இழப்பை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஐ) சிறந்த நிர்வாக வழிகாட்டி ''பட்டோலை ஜீ'' என்பதன் மூலம் கம்பனியின் செயலாளரது கடமையாக பணிப்பாளர் சபை நடவடிக்கைகளுக்குரிய அறிக்கைகள் போன்றவற்றிற்கான நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சபையின் செயலாளரிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. அந் நடவடிக்கைகளுக்கு வேறாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 3.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டின்போது ரூபா 128,910,000 பெறுமதியான பாரந்தூக்கி இயந்திரமொன்று வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனை வழங்கியவர் சீனிக் கம்பனியுடன் இணங்கியவாறு தொழிற்சாலை வளவில் இதனை நிறுவாமையால் கொள்வனவு செய்யப்பட்ட நாட் தொடக்கம் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. இந்த இயந்திரத்தின் பொருட்டு மீளாய்வாண்டின்போது கம்பனி கொடுப்பனவு செய்திருந்த வாடகைக் கொள்வனவுத் தவணைப் பணமும் வட்டியும் ரூபா 21,734,748 ஆகும். தொடர்ந்தும் எதிர்வரும் 02 ஆண்டுகளுக்கும் வட்டியுடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 27,168,660 ஆதலால் இது பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

## 3.4 பதவியணி முகாமைத்துவம்

ஆட்சேர்ப்பு நடைமுறையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக அங்கீகரித்து பதவியணியைக் குறிப்பாக இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை கம்பனி மேற்கொள்ளவில்லை. முகாமைத்துவ மட்டத்திலான 8 உத்தியோகத்தர்கள் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் கம்பனியின் தலைமை அலுவலகத்தில் ஆட்சேர்க்கப்பட்டு அந்த நியமனங்கள் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கணக்காய்வுக் குழு

கம்பனியால் கணக்காய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கையில் அக்குழுவால் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துதல் மற்றும் ஆண்டறிக்கையைக் கம்பனிகள் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் ஆகிய நடவடிக்கைகளின்போது பணிப்பாளர் சபைக்குப் போதிய வழிகாட்டல் இல்லாமையால் அந்நடவடிக்கைகள் நேரகாலத்துடன் நடைபெறவில்லை.

## 4.2 சுற்றாடல் கணக்காய்வு

தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் வடிகாலமைப்புக் கூறு மீளாய்வாண்டு முடிவிலும் பூர்த்தியாகாததுடன், அக்கழிவு நீர் சுற்றாடலில் கலப்பதால் சுற்றாடலில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்குக் கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை.

## 4.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 4.1(அ)(i) பந்தியின் பிரகாரம் ரூபா 28,163,089 செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட சனசமூக நிலையத்திற்கும் வரவேற்பு இல்லத்திற்கும் செலவிடப்பட்ட கிரயத்திற்கு ஏற்ற பிரதிபலனை அடைய முடியவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) மனித வள முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்தல், குறித்த பதவியணியினரை ஆட்சேர்த்தல். |
| (ஆ) பொருட் கொள்வனவுக் கட்டுப்பாடு | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள அறிவுறுத்துரைகளைக் கடைப்பிடித்து பொருட் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |